# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

Under Section 173 BNSS

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102141

1. District மாவட்டம் : திண்டுக்கல் PS: காவல்நிலையம் V&AC., Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 08/24 Date: நாள் 22.10.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988, as amended by the P.C (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 21.10.2024 Date from : நாள் முதல் 19.30 hrs Date to : நாள் வரை 22.10.2024 - 01.00 மணி வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை —
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.10.2024 Time நேரம் : 16.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 22.10.2024 Time நேரம் : 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலகம் சுமார் 40 கி.மீ தென் மேற்கு திசையில்
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி —
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கா. இப்ராகிம் சேட் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் காதர் மீரான்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 53/2024 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. V. துரைசாமி, சார் பதிவாளர் ஆத்தூர், பொறுப்பு சார் பதிவாளர், வத்தலக்குண்டு
   2. D. மணிகண்டன் த/பெ துரைராஜ், கதவு எண். 7515C/1J, தெற்குத் தெரு, வத்தலக்குண்டு,
   3. P. பிரசாந்த் த/பெ பெரிய கருப்பன், கதவு எண். 2/108, கன்னிமார் கோவில்பட்டி, விராலிபட்டி, வத்தலக்குண்டு, 4. K. ராக்கம்பாண்டி, த/பெ குமரேசன், இராமலிங்கம் நகர், அய்யம்பாளையம், திண்டுக்கல் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 22/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 22/10/24
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22.10.24 at 17.00hrs.

Name: பெயர் இ.க. நாகராஜன்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
உணவுப் கடத்தல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திண்டுக்கல் மாவட்டம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.08/2024, சட்டப்பரிவு.7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி:-**

திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 22.10.2024-ம் தேதி மதியம் 15.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மதுரை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.கா.இப்ராஹிம் சேட் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 22.10.2024-ம் தேதி மதியம் 15.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.கா.இப்ராஹிம் சேட், த/பெ.காதர் மீரான், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை, பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல் அய்யா, நான் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நேற்று 21.10.2024ம் தேதி திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரபதிவிற்காக வருபவர்களிடம், பத்திர பதிவு எழுத்தர்கள், ஆவண எழுத்தர்கள் மூலம் அலுவலகத்தில் வைத்தும், புரோக்கர் மூலம் அலுவலகத்திற்கு வெளியில் வைத்தும், வத்தலக்குண்டு பத்திரப்பதிவு அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு பதிவுகளை மேற்கொள்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நேற்று மாலை 18.00 மணிக்கு திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திலிருந்து காவல் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் பார்ட்டி சகிதம் அரசு வாகனம் TN 21 G 0583 பொலிரோ வாகனத்தில் புறப்பட்டு சுமார் 19.20 மணிக்கு வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலகம் வந்தபோது, சார்பதிவாளரும், மற்றொருவரும் TN 57 BU 2466 என்ற Yamaha Ray Z இரண்டு சக்கர வாகனத்தில் அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு சுமார் 100மீ வடக்கு நோக்கி சென்றவர்களை தகவலின் பேரில் அவர்கள் வந்த வாகனத்தை குமரன் பூங்கா அருகில் மறித்து நிறுத்தப்பட்டது. அந்த வாகனத்தை ஓட்டி கொண்டு வந்த நபரை விசாரிக்க அவரது பெயர் மணிகண்டன் என்றும், பின்னால் அமர்ந்திருந்த நபரின் பெயர் திரு.துரைச்சாமி, சார்பதிவாளர், ஆத்தூர் சார்பதிவகம் என்றும், கூடுதல் பொறுப்பாக வத்தலக்குண்டு பார்ப்பதாகவும் தெரிவித்தனர். பின்னர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் ஆய்வுக்குழு ஆய்வாளரான என்னையும் மற்றும் குழுவினரை அறிமுகம் செய்து

வைத்து திடீர் சோதனை செய்ய வந்திருப்பதாகவும் அதற்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொண்டார். அவர்களும் ஒத்துழைப்பதாக உறுதி அளித்தனர். பின்னர் வத்தலக்குண்டு சார்பதிவாளர் திரு.துரைச்சாமி மற்றும் மணிகண்டன் ஆகியோரை அழைத்துக்கொண்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சுமார் 19.30 மணிக்கு வரப்பட்டது. அப்போது அந்த அலுவலகம் திறந்த நிலையில் இருந்தது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகமானது திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு பஸ்நிலையம் எதிரே பெருமாள்கோவில் தெருவில் மேற்கு பக்கம் கிழக்கு பார்த்து நுழைவு வாயில் கொண்டதாக உள்ளது. அந்த அலுவலகத்தில் நுழைந்தவுடன் நேர்எதிரே மேற்கு பக்கம் கிழக்கு பார்த்து சார்பதிவாளர் இருக்கை அமைந்துள்ளது. சார்பதிவாளர் இருக்கை அருகே திரு.மணிகண்டன் அவர்கள் அழைத்து வரப்பட்டு சோதனை செய்யப்பட்டது. அப்போது திரு.மணிண்டன் அவர்கள் அணிந்திருந்த சந்தன கலர் பேண்டின் இடது பக்க சைடு பாக்கெட்டில் கத்தையாக ஐந்நூறு ரூபாய் தாள்கள் இருப்பது கண்டறியப்பட்டது. அதனை நான் எண்ணி பார்த்த போது ஐந்நூறு ரூபாய் தாள்கள் தனித்தனியாக மடக்கி வைக்கப்பட்டு இருந்தது. அதில் 500x70= ரூ.35,000/-, 500x22= ரூ.11,000/-, 500x8= ரூ.4,000/- என மொத்தம் ரூ.50,000/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து திரு.மணிகண்டன் அவர்களிடம் விளக்கம் கேட்டதற்கு, அவர் சுமார் 10 வருடங்களாக இந்த அலுவலகத்தில் பதிவு செய்யவரும் ஆவண எழுத்தர்களுக்கு உதவியாகவும், மேலும் சார்பதிவாளருக்கு உதவியாகவும் இருந்து வருவதாக தெரிவித்தார். மேலும் தினமும் மாலை சார்பதிவாளரை வத்தலக்குண்டு பேருந்து நிலையத்தில் தனது இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்று இறக்கிவிடுவதாகவும், மேலும் அவர் வைத்திருந்த பணம் அவரது சொந்த பணம் என்றும் தெரிவித்தார். ஆனால் அதற்கு தகுந்த விளக்கம் தெரிவிக்காததாலும், மேலும் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இல்லாததாலும், நேற்று (21.10.24) வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களுக்கு ஆவண எழுத்தர்களிடமிருந்து சார்பதிவாளருக்காக லஞ்சமாக வசூல் செய்து சார்பதிவாளர் திரு.துரைச்சாமி அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால் விசாரணைக்காக மகஜரில் பணம் ரூ.50,000/- கைப்பற்றப்பட்டது. பின்னர் திரு.மணிகண்டன் அவர்களிடம் TN 57 BU 2466 என்ற Yamaha Ray Z என்ற இருசக்கர வாகனம் குறித்து கேட்டபோது அந்த வாகனம் அவருக்கு சொந்தமானது என்றும், சார்பதிவாளர் திரு.துரைச்சாமி அவர்களை

வத்தலக்குண்டு பேருந்து நிலையத்தில் இறக்கிவிடுவதற்கு சென்றுகொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். அந்த இருசக்கர வாகனத்தில் இருக்கைக்கு கீழ் பொருள் வைக்கும் பெட்டியை சோதனை செய்தபோது லீகல் சைஸ் கான்கிரிட் பேப்பரில் தேதி வாரியாக பணம் பரிமாற்றம் செய்தது தொடர்பான விபரங்கள் கருப்பு நிற மைப்பேனாவால் எழுதப்பட்டு சரிபாதியாக நெட்டுவாக்கில் மடிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஆவண விபரம் | தாள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 18.07.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 1 தாள் |
| 2 | 01.08.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 5 தாள்கள் |
| 3 | 02.08.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 5 தாள்கள் |
| 4 | 23.09.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 5 தாள்கள் |
| 5 | 24.09.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 5 தாள்கள் |
| 6 | 25.09.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 5 தாள்கள் |
| 7 | 26.09.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 5 தாள்கள் |
| 8 | 27.09.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 6 தாள்கள் |
| 9 | 30.09.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 5 தாள்கள் |
| 10 | 01.10.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 8 தாள்கள் |
| 11 | 03.10.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 8 தாள்கள் |
| 12 | 04.10.2024ம் தேதிக்கான பணபரிமாற்ற விபரங்கள் | 5 தாள்கள் |

மேற்கண்ட ஆவணங்களில் சந்தேகத்திற்கிடமானவகையில் பணப்பரிமாற்ற விபரங்கள் எழுதப்பட்டிருப்பதால் அவை பத்திரப்பதிவு செய்தற்கு லஞ்சமாக பெறப்பட்ட பணவிபரங்கள் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருந்ததால் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் திரு.துரைச்சாமி அவர்களை சோதனை செய்ய அவரது சட்டையின் இடதுபுற மேல்பாக்கெட்டில் இருந்து ரூ.20/- மற்றும் ஒரு ரூபாய் நாணயங்கள் 5 என ரூ.25/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் சார்பதிவாளர்

திரு.துரைச்சாமி அவர்களிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த அலுவலகத்தின் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே இருந்த நபர்களை விசாரிக்க அவர்கள் 1). திருமதி.N.கௌசல்யா, உதவியாளர், 2). திருமதி.K.மகேஷ்வரி, கேமரா ஆப்பரேட்டர், 3). திரு.R.குமார் Data Entry Operator, 4). திரு.B.ராஜேஸ், ஆத்தூர் கேமரா ஆப்பரேட்டர், 5). திரு.பிரசாந்த் 6). திரு.விக்ரம்பாண்டி என்றும் தெரிவித்தனர். திரு.பிரசாந்த் என்பவரை விசாரிக்க தான் வத்தலக்குண்டுவில் திரு.ஜெய்லானி என்பவருக்கு சொந்தமான தனியார் ”இ” சேவை மையத்தில் பணிபுரிவதாகவும், வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் 21.10.24ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.4132/2024 மற்றும் பழைய ஆவணம் பதிவு செய்தது தொடர்பாக வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரது பேண்டின் பின்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பிரவுன் கலர் பணிபர்ஸில் 500x52= ரூ.26,000/-, 100x10= ரூ.1000/- என மொத்தம் ரூ.27,000/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அந்த பணம் அவரது சொந்தபணம் என்றும், பத்திரபதிவு செய்யும் பணிகளுக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்கவகையில் இல்லாததாலும், வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் 21.10.24ம் தேதி ஆவண எண்.4132/2024 என்ற விற்பனை ஆவணத்தை பதிவிற்காக சமர்பித்ததாகவும் அந்த ஆவணத்தை பதிவு செய்து கொடுத்ததற்கு லஞ்சமாக சார்பதிவாளர் திரு.துரைச்சாமி அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால் விசாரணைக்காக மகஜரில் பணம் ரூ.27,000/- கைப்பற்றப்பட்டது. பின்னர் திரு.விக்ரம்பாண்டி என்பவரை விசாரிக்க தான் வத்தலக்குண்டுவில் ஸ்டாம்ப் வென்டர் ஆக இருக்கும் திரு.ஜெய்லானி என்பவரிடம் பணிபுரிவதாகவும், திரு.பிரசாந்த் மற்றும் மற்றொரு நண்பரான ஆத்தூர் சார்பதிவகத்தில் கேமரா ஆப்ரேட்டராக பணிபுரியும் திரு.ராஜேஸ் ஆகியோருடன் வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும், மேற்படி திரு.ராஜேஸ் அவரது நண்பரின் தாத்தாவிற்கு இறப்பு சான்றிதழ் பெறுவதற்கு உடன் வந்ததாகவும், அவரை சோதனை செய்தபோது அவரது சட்டையின் வெளிப்புற மேல்பாக்கெட்டில் 500x11= ரூ.5,500/-, 200x1=ரூ.200, 100x1=ரூ.100, 50x1= ரூ.50/-, 20x1=ரூ.20/- 10x1= ரூ.10/- என மொத்தம் ரூ.5,900/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அந்த பணம் அவரது சொந்தபணம் என்றும், பத்திரபதிவு

செய்யும் பணிகளுக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்கவகையில் இல்லாததாலும், வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணத்தை பதிவு செய்து கொடுத்ததற்கு லஞ்சமாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால் விசாரணைக்காக மகஜரில் பணம் ரூ.5,900/- கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி திரு.விக்ரம்பாண்டி அருகே நின்றிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவரது பெயர் திரு.ராஜேஸ் என்றும், திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கேமரா ஆபரேட்டராக பணி செய்து வருவதாகவும், அவரது நண்பரின் தாத்தாவிற்கு இறப்பு சான்றிதழ் பெறுவது சம்மந்தமாக இங்கு வந்ததாகவும், தனது நண்பர்களான திரு.பிரசாந்த் மற்றும் திரு.விக்ரம்பாண்டி ஆகியோர்களுடன் வருகை தந்ததாகவும் தெரிவித்தார். அவரை ஆய்வுக்குழு ஆய்வாளர் முன்பாக சோதனை செய்தபோது அவரது சட்டையின் இடதுபுற மேல்பாக்கெட்டில் 500x2=1000, 100x1-100, 20x1-20/- என மொத்தம் ரூ.1,120/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்தபணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அந்த பணம் அவரது சொந்தபணம் என்றும் கைச்செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்கவகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.1,120/- அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலகத்தின் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே வடக்கு முகம் பார்த்தவாறு இருந்த கண்ணாடி அறைக்குள் இருந்த நபர்களை விசாரிக்க அவர்களிடம் கீழ்கண்டவாறு பணம் இருப்பது தெரியவந்தது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | கண்டறியப்பட்ட பணம் |
|---|---|---|
| 1 | திருமதி.N.கௌசல்யா, உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், வத்தலக்குண்டு | ரூ.1300/- |
| 2 | திருமதி.K.மகேஷ்வரி, கேமரா ஆப்பரேட்டர், சார்பதிவாளர் அலுவலகம், வத்தலக்குண்டு | ரூ.82/- |
| 3 | திரு.R.குமார். Data Entry Operator, சார்பதிவாளர் அலுவலகம், வத்தலக்குண்டு | ரூ.210/- |

மேற்படி பணம் குறித்து அவர்களிடம் விசாரிக்க அந்த பணம் அவர்களது சொந்த பணம் என்றும் கைச்செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தனர். அவர்களது விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்கவகையில் இருந்ததால் அவர்கள் வைத்திருந்த பணம் அவர்களிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அலுவலத்தில் காணப்பட்ட இருக்கைகள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை சோதனை செய்தபோது சந்தேகத்திற்கிடமான பணமோ பொருளோ

இருப்பது கண்டறியப்படவில்லை. பின்னர் அந்த அலுவலகத்தன் முதல்தளம் குறித்து சார்பதிவாளர் திரு.துரைச்சாமி அவர்களிடம் கேட்டபோது முதல்தளமானது ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் வைக்கும் அறையாக பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தின் முதல்தளத்தில் இருந்த அறைகளை சோதனை செய்தபோது சந்தேகத்திற்கிடமான பணமோ பொருளோ இருப்பது கண்டறியப்படவில்லை. பின்னர் சார்பதிவாளர் அவர்களிடம் இன்று பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து கேட்ட போது, அதற்கு அவர் இன்று 39 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அவற்றில் 31 ஆவணங்கள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படாமல் இருப்பதாகவும், தெரிவித்தார். நிலுவையில் உள்ள ஆவணங்களை உரிய பதிவுதாரர்களுக்கு வழங்கிடுமாறு சார்பதிவாளரை துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அறிவுறுத்தினார். பின்னர், சார்பதிவாளர் அவர்களிடம் ஆவணங்களை ஆஜர் செய்யுமாறு துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டார். சார்பதிவாளர் திரு.துரைச்சாமி அவர்கள் கீழ்கண்ட ஆவணகளை ஆஜர் செய்தார். அந்த ஆவணங்களின் தொடர்புடைய பக்கங்கள் நகல் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது.

| வ. எண் | ஆவண விபரம் | தாள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலக தனி நபர் கையிருப்பு பதிவேடு | 3 தாள்கள் |
| 2 | வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலக வருகை பதிவேடு | 2 தாள்கள் |
| 3 | வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலக Account ‘A’ Abstract, dated.21.10.2024 | 2 தாள்கள் |
| 4 | வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலக Account ‘CD’ Abstract, dated.21.10.2024 | 2 தாள்கள் |
| 5 | வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலக Account ‘D’ Abstract, dated.21.10.2024 | 1 தாள் |
| 6 | வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலக Section 41 Abstract, dated.21.10.2024 | 3 தாள்கள் |
| 7 | வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலக Sub-Division Account, dated.21.10.2024 | 1 தாள் |

மேற்கண்ட சோதனையில் கீழ்கண்ட நபர்களிடமிருந்து பணம் ரூ.82,900/-ஆனது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

| வ.எண் | பெயர் | கைப்பற்றப்பட்ட தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.Dமணிகண்டன் , த/பெ.துரைராஜ், எண்.7515C/1J, தெற்கு தெரு, வத்தலக்குண்டு, திண்டுக்கல் மாவட்டம் | ரூ.50,000/- |
| 2 | திரு.P.பிரசாந்த், த/பெ.பெரியகருப்பன், எண்.2/108, கண்ணிமார்கோவில்பட்டி, விராலிபட்டி, வத்தலக்குண்டு, நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் | ரூ.27,000/- |
| 3 | திரு.K.விக்ரம்பாண்டி, த/பெ.குமரேசன், ராமலிங்கம் நகர், அய்யம்பாளையம், திண்டுக்கல் | ரூ.5,900/- |
| | மொத்தம் | ரூ.82,900 |

மேலும் கொடிநாள் பணம் வசூல் சம்மந்தமாக விசாரித்தபோது தற்போது இணையதளம் (https://flagday.tn.gov.in) மூலமாக செலுத்தப்படுவதாக தெரிவித்தார். இன்றைய தேதியில் எந்தஒரு கொடிநாள் பணமும் வசூல் செய்யவில்லை. மேலும் இத்திடீர் தணிக்கையின் போது அலுவலகத்திலிருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் சோதனையின் போதிருந்த அலுவலர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உடல் ரீதியாகவோ மற்றும் மன ரீதியாகவோ எவ்வித துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. இந்த திடீர் இணை ஆய்வு தொடர்பாக செயல்முறை குறிப்புகள் 21.10.2024ம் தேதி 19.30 மணிமுதல் 22.10.2024ம் தேதி நள்ளிரவு 01.00 மணிவரை தயார் செய்யப்பட்டது. மேலும் மேற்படி கணக்கில் வராத லஞ்சப்பணம் ரூ.89,200/- தொடர்பாக 1) திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சார்பதிவாளர் மற்றும் வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலக கூடுதல் பொறுப்பு வகிக்கும் திரு.V.துரைச்சாமி, 2) திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு, தெற்கு தெரு, கதவு எண்.7515C/1Jல் வசிக்கும் துரைராஜ் மகன் திரு.D.மணிகண்டன் 3) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, வத்தலக்குண்டு, விராலிபட்டி, கண்ணிமார்கோவில்பட்டி, கதவு எண்.2/108ல் வசிக்கும் பெரியகருப்பன் மகன் திரு.P.பிரசாந்த் 4) திண்டுக்கல் மாவட்டம், அய்யம்பாளையம், ராமலிங்கம் நகர், குமரேசன் மகன் திரு.K.விக்ரம்பாண்டி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/- xxxxx (K.Ibrahim Sait, 22/10/2024)

Sir, Received the complaint on 22.10.2024 at 16.00 Hrs. and registered a case in Dindigul Vigilance and Anti-Corruption Cr.No.08/2024 u/s 7(a)of of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 22.10.2024 at 16.00 hrs. Sd/-xxxxx (J.Nagarajan, Deputy Superintendent of Police, V&AC, Dindigul 22.10.2024)

Original FIR along with the complaint of Tr.K.Ibrahim Sait, the Inspection Cell Inspector, O/o. the Inspection Cell Officer, Madurai and the Joint Surprise check proceedings are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

22/10/2024

(J.Nagarajan)
Dy.Supdt. of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.